செ.வெ.எண்.08 நாள்: 01.09.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்.**

திருநெல்வேலி காந்திமதி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை துவக்க நிகழ்ச்சி இன்று (01.09.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கோ-ஆப்டெக்ஸ் அங்காடிகள் மூலம் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழக அரசு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை அறிவிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 17 கோ-ஆப்டெக்ஸ் அங்காடிகள் உள்ளது. ஜங்சன் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள காந்திமதி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கடந்த ஆண்டு ரூ.5 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. 17 விற்பனை நிலையங்களையும் சேர்த்து கடந்த ஆண்டு மொத்தம் ரூ.30 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது. இதில், தீபாவளி சிறப்பு விற்பனையின் போது ரூ.16 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.20 கோடி விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 30 சதவிகிதம் தள்ளுபடி விற்பனை செய்யப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 17 விற்பனை நிலையங்களிலும் இன்று முதல் சிறப்பு தள்ளுபடி விற்பனை துவங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிக அளவில் கோ-ஆப்டெக்ஸ் கடைகளில் பட்டு மற்றும் அனைத்து இரகங்களையும் வாங்கி பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் திரு.இசக்கிமுத்து, காந்திமதி கோ-ஆப்டெக்ஸ் மேலாளர் திரு.கனகசபாபதி, சாராள்தக்கர் கல்லூரி வேதியியல் துறை தலைவர் முனைவர்.திருமதி.ரமா மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி